தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm07042026.37

# The Philanthropic Excellence of Nalliyakkodan in Aatruppadai Literature: A Comprehensive Historical and Literary Analysis

**Mrs. S. Revathi[1*], Dr N.Manikkam[2],**

[1]Full-Time Ph.D. Research Scholar, Department of Tamil Studies, Registration No: (BDU2010632778741), National College (Autonomous), Affiliated with Bharathidasan University, Tiruchirappalli - 620001.

[2]Research Guide, Associate Professor, Research Department, National College (Affiliated to Bharathidasan University) Trichy, Tamil Nadu India.

*Correspondence: revathisanthiran707@gmail.com.

**Article Info**
Received on 25-April-2026, Revised on 26-April-2026, Accepted on 26-April-2026, Published on 01-May-2026

## ABSTRACT

In the history of ancient Tamil Nadu, the Sangam era stands as a golden age of art, culture, valor, and philanthropy. A person possessing the capability to rule a country is referred to as a king (Arasan or Mannan). When the territory is small, he is called a chieftain (Kurunila Mannan). A king is one who establishes a stable governance. A ruling monarch must govern efficiently, centering his administration on justice and neutrality. A king's glory depends entirely on the excellence of his reign.

Compared to contemporary rulers, the reign of Nalliyakkodan was loftier, purer, and deeply rooted in righteousness, much like the sacred right-coiled conch (Valampuri Sangu). His rule was more distinguished than even that of the three crowned monarchs—the Cheras, Cholas, and Pandyas. In the land under his righteous sceptre (Sengol), there were no bandits who ambushed, assaulted, and plundered the belongings of travelers for a living. His country was well-guarded, and there was no room for any evil to thrive. This section briefly analyzes the nature of Nalliyakkodan's country and the excellence of his governance.

Particularly, as depicted in Sirubanarruppadai, Nalliyakkodan is portrayed as a ruler who embodied the collective philanthropic virtues of all the Last Seven Patrons (Kadaiyezhu Vallalgal). This paper provides a detailed analysis of his philanthropic prowess, valor, character traits, and the archaeological and historical background of the Oiyma-nadu kingdom that he ruled.

***KEYWORDS:*** *Nalliyakkodan, Philanthropy, Compassion, Humanism, Sirubanarruppadai, Oiyma-nadu, The Last Seven Patrons, Sangam Literature, Archaeological Studies.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 05 (May-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07052026*

# ஆற்றுப்படை நூல்களில் நல்லியக்கோடனின் கொடைச் சிறப்புகள்: ஒரு விரிவான வரலாற்று மற்றும் இலக்கியப் பகுப்பாய்வு

[1]திருமதி **ச.ரேவதி,** முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர் தமிழாய்வுத்துறை, பதிவு எண்-(BDU2010632778741), தேசியக் கல்லூரி (தன்னாட்சி), பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப்பெற்றது, திருச்சிராப்பள்ளி, 620 001.

[2]**முனைவர்.ந மாணிக்கம்**, இணைப் பேரரசிரியர் தமிழாய்வுத் துறை, நெறியாளர், தேசியக் கல்லூரி ( பாரதிதாசன் பல்கலைகழகம் இணைவு பெற்றது), திருச்சி. தமிழ்நாடு.

**ஆய்வுச்சுருக்கம்:**

பண்டைய தமிழகத்தின் வரலாற்றில் சங்க காலம் என்பது கலை, கலாச்சாரம், வீரம் மற்றும் கொடைத்திறன் ஆகியவற்றின் பொற்காலமாகத் திகழ்கிறது. ஒரு நாட்டின் அரசனாக ஆளும் திறமை பெற்ற ஒருவனை அரசன் அல்லது மன்னன் என்று கூறுகிறோம். ஒரு சிறிய நாடு என்று கூறும் போது அவனை குறுநில மன்னன் என்று அழைக்கிறோம். நிலையான ஆட்சியை மேற்கொள்பவன் மன்னன் ஆவான்.[1] ஆளும் அரசன் நீதியோடு நடுநிலைமையை மையமாக வைத்து ஆட்சி சிறப்பினை திறம்பட செயல்படுத்துதல் வேண்டும். ஒரு மன்னனுக்குப் பெருமை அவன் அரசாளும் சிறப்பைப் பொறுத்தே அமையும். அவர்தம் ஆட்சியை விட நல்லியக்கோடனின் ஆட்சி வலம்புரி சங்கை போன்று உயர்வுடையது, தூய்மையானது, அறம் புரியும் தன்மை கொண்டது.[1] சேர, சோழ, பாண்டியன் என முடியுடை மூவேந்தர் ஆட்சியை விட நல்லியக்கோடனின் ஆட்சி சிறப்பு வாய்ந்தது. அவனது செங்கோல் ஆட்சி நிலவியுள்ள நாட்டில் வழிப்போக்கரை அலறும்படி தாக்கி அவர்தம் பொருட்களைக் கொள்ளைக்கொண்டு வாழ்க்கை நடத்துவோர் இல்லை. அவனுடைய நாடு காவல் உடையது. எவ்வித தீமைகளும் நடக்கும் இயல்பு இல்லை என்று நல்லியக்கோடனின் நாட்டைப் பற்றியும் அவனது ஆட்சி சிறப்பைப் பற்றியும் சுருக்கமாக இப்பகுதி ஆராய்கிறது.[1] குறிப்பாக, சிறுபாணாற்றுப்படை காட்டும் நல்லியக்கோடன், கடையேழு வள்ளல்களின் கொடைப்பண்பை ஒருங்கே பெற்றவனாகச் சித்தரிக்கப்படுகிறான். இக்கட்டுரை அவனது கொடைத்திறன், வீரம், பண்புநலன்கள் மற்றும் அவன் ஆண்ட ஓய்மாநாட்டின் தொல்லியல் வரலாற்றுப் பின்னணியை விரிவாகப் பகுப்பாய்வு செய்கிறது.[1]

**திறவுச்சொற்கள்:**

நல்லியக்கோடன், கொடை பண்பு, இரக்கம், மனித நேயம், சிறுபாணாற்றுப்படை, ஓய்மாநாடு, கடையேழு வள்ளல்கள், சங்க இலக்கியம், தொல்லியல் ஆய்வுகள்.[1]

## 1. முன்னுரை

மன்னன் என்பவன் தன்னுடைய நாட்டினை மிகவும் வலிமையுடனும் செழிப்புடனும் சிறப்பாக ஆட்சி நடத்த வேண்டும். அவ்வாறு இருக்கும் மன்னன் மக்களிடம் இறைவனாகக் கருதப்படுவான்; மேலும் அவன் வீரத்திலும் கொடையிலும் வெற்றியிலும் தன்னிகரில்லாத தலைவனாக மன்னன் கருதப்படுகிறான்.[1] பண்டைய தமிழகத்தில் மன்னர்கள் வெறும் நிலப்பரப்பை ஆள்பவர்களாக மட்டும் இல்லாமல், கலைகளையும் கலைஞர்களையும் காக்கும் புரவலர்களாகத் திகழ்ந்தனர்.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

அழகான வானத்தில் விண்மீன்கள் கூட்டம் நிறைந்து காணப்படும்; அந்த விண்மீன்களுக்கு இடையே அழகாகத் தோற்றமளிக்கும் நிலாவைப் போல மன்னன் அழகாக அமர்ந்து காட்சி தருவான்.[1]

சங்க இலக்கியத் தொகுப்பான பத்துப்பாட்டில் இடம்பெற்றுள்ள சிறுபாணாற்றுப்படை, நல்லூர் நத்தத்தனாரால் பாடப்பட்டது. இது ஓய்மாநாட்டு மன்னன் நல்லியக்கோடனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது. வறுமையில் வாடும் பாணர்களை நோக்கி, பரிசில் பெற்ற பாணன் ஒருவன் நல்லியக்கோடனின் கொடைப்பண்பையும் நாட்டின் வளத்தையும் கூறி ஆற்றுப்படுத்துவதே (வழிப்படுத்துவதே) இந்நூலின் மையப்பொருள்.[4] நல்லியக்கோடன் முடியுடை மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்களை விடவும், புகழ்பெற்ற கடையேழு வள்ளல்களை விடவும் கொடைத்திறத்தில் சிறந்து விளங்கினான் என்பது புலவரின் கருத்தாகும்.[3] அவனது ஆளுமை என்பது போர் வெற்றிகளால் மட்டுமல்லாது, மக்களின் துயர் துடைக்கும் ஈகையினாலும் கட்டமைக்கப்பட்டது.[6]

## 2. மன்னன் என்பதன் பொருள் மற்றும் இலக்கணம்

மன்னன் என்ற சொல்லானது தமிழ்ச் சூழலில் மிகுந்த ஆழமும் பொருளும் கொண்டது. இது வெறும் அதிகாரத்தைக் குறிக்கும் சொல் அல்ல; அது ஒரு பொறுப்பையும் நிலைபேற்றையும் குறிக்கிறது.

### 2.1 சொல் பிறப்பியல்

"மன்" என்ற சொல்லின் அடியாகத் தோன்றியது மன்னன் என்ற சொல் ஆகும்.[1]

"மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்" (புறம் -165)

என்னும் புறப்பாட்டு அடிகள் இதற்கு அரண் செய்கின்றன.[1] 'மன்' என்னும் சொல்லுக்கு நிலைபேறு என்பது பொருள்; மன்னன் என்பதற்கு நிலைபேறுடையவன் என்பது பொருளாகும். ஒரு நாட்டினை ஆட்சி செய்யும் தலைவனை மன்னன் என்று அழைக்கிறோம்.[1] நிலையற்ற இவ்வுலகில் புகழால் நிலைத்து நிற்பவனே உண்மையான மன்னன் என்ற கருத்தாக்கம் சங்க இலக்கியங்களில் வேரூன்றியுள்ளது.

### 2.2 வள்ளுவம் காட்டும் மன்னன் இலக்கணம்

மன்னன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்குத் தெய்வப்புலவர் திருவள்ளுவர் தெளிவான இலக்கணங்களை வகுத்துள்ளார்.

"வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்

கோழ்நோக்கி வாழும் குடி" (திருக் - 542)

உலகத்திலுள்ள எல்லா உயிர்களின் நல்வாழ்வும் மழையைப் பொறுத்து அமையும்; அதைப்போல் ஒரு நாட்டிலுள்ள குடிமக்களின் நல்வாழ்வும் அந்த நாட்டினை ஆட்சி செய்யும் மன்னனின் தன்மையைப் பொறுத்தே அமையும்.[1] மன்னன் என்பவன் மக்களின் அன்பைப் பெற்றவனாக

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

இருக்க வேண்டும் என்பதனை,

“குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு” (திருக் - 544)

என்னும் குறள் விளக்குகிறது.[1] அறிவையும் அறங்களையும் பாதுகாப்பதோடு அரசன் என்பவன் குடிகளின் அன்பையும் ஆதரவையும் பெற்றவனாக இருத்தல் வேண்டும். தன்னுடைய குடிமக்களின் எண்ணத்தை அறிந்து அரசாட்சி நடத்துபவனாக மன்னன் இருக்க வேண்டும்.[1] மேலும், வெற்றி என்பது வெறும் ஆயுத பலத்தால் வருவதல்ல என்பதனை,

“வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்” (திருக் – 546)

என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்.[1] அரசனுக்கு வெற்றி என்பதனைப் பெற்றுத் தருவது அவனுடைய ஆயுத பலம் மட்டுமல்ல அவனுடைய ஆட்சி முறைதான். அந்த ஆட்சி முறையானது நீதிநெறி தவறாததாக இருத்தல் வேண்டும். நல்லியக்கோடன் இத்தகைய செங்கோல் வழுவாத ஆட்சியைத் தந்ததால் தான், அவன் புலவர்களால் 'வலம்புரி சங்கு' போன்ற தூய்மையான ஆட்சிக்கு உரியவனாகப் புகழப்பட்டான்.[1]

### 3. ஓய்மாநாடு மற்றும் ஓவியர் குடியின் வரலாற்றுப் பின்னணி

நல்லியக்கோடன் ஆட்சி செய்த நாடு ஓய்மாநாடு என்று அழைக்கப்பட்டது. இது இன்றைய விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளை உள்ளடக்கியதாகும்.[7]

### 3.1 ஓவியர் குடி மற்றும் நாட்டின் பெயர்க்காரணம்

ஓவியர் குடி மக்கள் வாழ்ந்த நாடு ஓய்மானாடு எனப்பட்டது. சங்க காலத்தில் திண்டிவனம் பகுதியில் வாழ்ந்த இம்மக்கள் வாட்போரில் வல்லவர்களாகத் திகழ்ந்தனர்.[7] 'ஓ' என்னும் சொல் மதகடைக்கும் பலகையைக் குறிக்கும்.[7] ஏரிகள் மற்றும் நீர்நிலைகள் அதிகம் கொண்ட இப்பகுதியில், மதகுகளைச் சீரமைக்கும் தொழில் அல்லது அதன் மேலாண்மை முக்கியத்துவம் பெற்றிருந்ததால், இப்பகுதி 'ஓய்மாநாடு' (ஓ + மா + நாடு) என்று பெயர் பெற்றிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.[7] சிறுபாணாற்றுப்படை இந்நாட்டை "பொருபுனல் தரூஉம்" என்று குறிப்பிடுவது அதன் நீர் வளத்தைச் சான்றுபடுத்துகிறது.[7]

### 3.2 மாவிலங்கை - தலைநகரம்

நல்லியக்கோடனின் தலைநகரமாக மாவிலங்கை திகழ்ந்தது.[1] சங்க இலக்கியப் பாடல்களின்படி, இலங்கைத் தீவில் (தொன்மாவிலங்கை) கருவுற்ற ஒருவன் தமிழகத்திற்கு வந்து தலைமை ஏற்றபோது, தனது தலைநகருக்கு 'மாவிலங்கை' என்று பெயரிட்டதாகக் குறிப்புகள் உள்ளன.[7] இது 'நன்மாவிலங்கை' என்றும் அழைக்கப்பட்டது.[8] ஓவியர் குடியைச் சேர்ந்த மன்னர்களில்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

நல்லியக்கோடன் மற்றும் வில்லியாதன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.[7] வில்லியாதன் ஆண்ட ஊர் இன்று 'வெள்ளிமேடுபேட்டை' என்று அழைக்கப்படுகிறது.[7]

**3.3 மாவிலங்கையின் சமூக நிலை**

இங்கு வாழும் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்று நல்லியக்கோடன் நினைப்பவன்.[1] அவனது நாடு காவல் உடையது. திருட்டோ அல்லது வழிப்பறியோ இல்லாத அமைதியான சூழல் அங்கு நிலவியது.[1] தெருக்களில் யானைகளின் மதநீர் அருவி போலச் சொரிந்து புழுதியை அடக்கியது என்பதும், அங்கு விழாக்கள் ஓய்வின்றி நடந்தன என்பதும் அந்த நகரின் செழிப்பைக் காட்டுகின்றன.[1]

“அண்ணல் யானை அருசிதுகள் அவிப்ப
நீறு அடங்கு தெருவின் அவன் சாறு அயன்முகார்” (சிறுபாண் 200-201)

**4. நல்லியக்கோடனின் குணநலன்கள் மற்றும் பண்புச் சிறப்புகள்**

நல்லியக்கோடன் வலிமையான தோள்களையும், நேர்கொண்ட பார்வையையும் பெற்றவன்.[1] அவனது புகழுக்குக் காரணம் அவனிடம் அமைந்த நற்குணங்களே ஆகும்.[1] அவன் ஒரு சிறந்த மன்னனாகத் திகழ்ந்ததைச் சான்றோர்கள், போர் வீரர்கள், அரிவையர் மற்றும் பரிசிலர் என நால்வகைப் பிரிவினர் புகழ்வதாகச் சிறுபாணாற்றுப்படை விளக்குகிறது.[4]

**4.1 சான்றோர் போற்றும் அறப்பண்பு**

அறிஞர்கள் மற்றும் சான்றோர்கள் நல்லியக்கோடனை அவனது பிறவிக்குணங்களுக்காகப் புகழ்கின்றனர். அவன் செய்நன்றி மறவாதவன், தீயவர்களோடு சேராதவன், எப்பொழுதும் இன்முகத்துடன் இருப்பவன்.[4]

“செய்நன்றி அறிதலும் சிற்றினம் இன்மையும்
இன்முகத் உடைமையும்இனியன் ஆதலும்” (சிறுபாண்-207-208)

இந்த வரிகளின்படி, அவன் தனக்குச் செய்த சிறு உதவியையும் மதிக்கக் கூடியவன். மற்றவர்களிடம் பேசும்போது உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத நேர்மையாளன்.[4]

**4.2 போர் வீரர்கள் போற்றும் வீரம்**

அரசன் என்பவன் வீரமிக்கவனாக இருந்தால் தான் செங்கோலாட்சி நடத்த முடியும். நல்லியக்கோடன் புலி போன்ற வலிமை உடையவன்.[9] போர் வீரர்கள் அவனது வீரத்தைப் பின்வருமாறு புகழ்கின்றனர்:

- பகைவரை அஞ்சாது அழிக்கும் ஆற்றல்.[4]
- தன்னை அடிபணிந்த பகைவரிடத்துக் கோபம் கொள்ளாது இரக்கம் காட்டுதல்.[4]
- புறமுதுகிட்டு ஓடும் தனது வீரர்களை வீரமொழிகள் கூறி மீண்டும் போரிடச் செய்தல்.[4]

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

“அஞ்சினர்க்கு அளித்தலும் வெஞ்சினம் இன்மையும்
ஆண்அணி புகுதலும் அழிபடை தாங்கலும்
வாள்மீக் கூற்றத்து வயவர் ஏத்த” (சிறுபாண்-210- 212)

யானையை வாளால் வெட்டி, வளைந்த தனது வாளை யானையின் தந்தத்திலேயே அழுத்திச் சரி செய்த வீரம் அவனுக்கு உண்டு.[1] இதனால் மற்ற மன்னர்கள் அவனுக்கு அடிபணிந்து திறை செலுத்தினர்.[1]

### 4.3 அரிவையர் (பெண்கள்) போற்றும் மேன்மை

பெண்கள் நல்லியக்கோடனைத் தங்களின் பாதுகாவலனாகக் கருதினர். அவன் நினைத்ததை முடிக்கும் வல்லமை படைத்தவன்.[4] பெண்கள் வசப்படாத மன உறுதி கொண்டவன்.[4]

“கருதியது முடித்தலும் காமுறப் படுதலும்
ஒருவழிப் படாமையும் ஓடியது உணர்தலும்
அரியேர் உண்கண் அரிவையர் ஏத்த” (சிறுபாண் 213-215)

பெண்களின் மன வருத்தத்தை அறிந்து அதைப் போக்கும் இயல்புடையவன் நல்லியக்கோடன்.[1]

### 4.4 பரிசிலர் போற்றும் வள்ளல் தன்மை

பரிசில்கள் பெற வருபவர்கள் நல்லியக்கோடனைப் புகழும்போது அவனது 'அறிவு மடம்' மற்றும் 'வரிசை அறிதல்' ஆகியவற்றை முதன்மைப்படுத்துகின்றனர்.[4]

- **அறிவு மடம்படுதல்:** அறிவு குறைந்தவர்கள் வந்து எதைப் பேசினாலும், தான் எல்லாம் அறிந்தவன் என்ற கர்வம் கொள்ளாமல், ஒன்றும் அறியாதவன் போல அன்புடன் கேட்பான்.[4]
- **வரிசை அறிந்து பரிசு நல்கல்:** வந்திருப்பவரின் தகுதி மற்றும் தேவையை அறிந்து, அவர்கள் சுயமரியாதை பாதிக்கப்படாத வகையில் வாரி வழங்குவான்.[4]
- **வரையாது வழங்குதல்:** இவ்வளவு தான் கொடுக்க வேண்டும் என்ற வரையறை இன்றி அள்ளிக் கொடுக்கும் வள்ளல் அவன்.[4]

## 5. கடையேழு வள்ளல்களும் நல்லியக்கோடனின் கொடை ஒப்பீடும்

சங்க காலத்தில் கடையேழு வள்ளல்கள் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட கொடைச் செயலுக்காகப் புகழ்பெற்றனர். ஆனால், நல்லியக்கோடன் அவர்கள் எழுவரின் கொடைத்திறத்தையும் தன்னுள் அடக்கியவனாகக் கருதப்படுகிறான்.[1]

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

**5.1 கடையேழு வள்ளல்களின் பட்டியல் மற்றும் சிறப்புகள்**

| வள்ளல் பெயர் | நாடு / பகுதி | கொடைச் சிறப்பு |
|---|---|---|
| பேகன் | பொதினி (பழனி மலை) | குளிரால் நடுங்கிய மயிலுக்குத் தனது போர்வையை அளித்தது.[11] |
| பாரி | பறம்பு மலை | படரக் கொம்பின்றித் தவித்த முல்லைக் கொடிக்குத் தனது தேரை ஈந்தது.[11] |
| காரி | திருக்கோவிலூர் | இரவலர்களுக்கு இனிய மொழிகளுடன் குதிரைகளையும் செல்வத்தையும் தந்தது.[11] |
| ஆய் | பொதிகை மலை | நீலநாகம் தந்த அபூர்வ ஆடையைச் சிவபெருமானுக்கு (ஆலமர் செல்வன்) அணிவித்தது.[11] |
| அதியமான் | தகடூர் | தனக்குக் கிடைத்த நீண்ட ஆயுள் தரும் நெல்லிக்கனியை ஔவையாருக்கு வழங்கியது.[11] |
| நள்ளி | நளிமலை | தன்னை நாடி வந்தவர்கள் இனி யாரிடமும் கேட்காத அளவிற்குப் பெரும் பொருள் அளித்தது.[11] |
| ஓரி | கொல்லிமலை | தனது கொல்லிமலை நாடு முழுவதையும் பாணர்களுக்கும் கூத்தர்களுக்கும் பரிசாக அளித்தது.[11] |

**5.2 ஈகைச் செந்நுகம் தாங்கியவன்**

மேற்கண்ட ஏழு வள்ளல்களும் ஈகை என்னும் அறத்தைச் சுமந்த மாடுகள் போலத் தங்கள் கடமையைச் செய்தனர். அவர்கள் காலத்திற்குப் பிறகு அந்த ஈகை என்னும் பாரத்தைச் சுமக்க ஆளின்றித் தவித்தபோது, நல்லியக்கோடன் தனி ஒருவனாக அந்த 'ஈகைச் செந்நுகத்தை' (The Yoke of Charity) ஏற்றுக்கொண்டான்.[1]

“எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருநாள் தாங்கிய உரனுடை நோன்தாள்” (சிறுபாண்-113-115)

இந்த வரிகள் நல்லியக்கோடனின் கொடைத்திறன் கடையேழு வள்ளல்களின் ஒட்டுமொத்தப் பண்பிற்கும் சமமானது என்பதை நிறுவுகின்றன.[1] அவன் கடையேழு வள்ளல்களுள் காலத்தால் பிந்தியவன் என்றாலும், புகழால் அவர்களுடன் இணையாகவும், சில இடங்களில் அவர்களை விட மேலாகவும் பேசப்படுகிறான்.[1]

**6. நல்லியக்கோடனின் கொடையும் அறநெறிகளும்**

நல்லியக்கோடனின் கொடை என்பது வெறும் செல்வத்தைப் பகிர்ந்து கொள்வது மட்டுமல்ல, அது ஒரு உயர்ந்த மனித நேயச் செயல்பாடாகும்.[6]

### 6.1 இரக்கப்பண்பும் இன்சொல்லும்

வறுமையால் வருபவர்களைக் கண்டு அவர்களின் முகத்தைப் பார்த்து அவர்களுக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்து அனுப்பி வைப்பவன் நல்லியக்கோடன். அவனது மனம் எப்போதும் மலர்ந்த செந்தாமரை போலக் காணப்படும்.[1] வள்ளுவரின் வாக்கிற்கேற்ப,

“முகத்தான் அமர்ந்து இனிதுநோக்கி அகத்தானாய்

இன்சொல் இனிதே அறம்” (திருக் - 93)

முகத்தில் மலர்ச்சியுடன், மனதிலிருந்து வரும் இனிய சொற்களைப் பேசி ஈகை புரிவதே உண்மையான அறம் என்பதை அவன் மெய்ப்பித்தான்.[1] உயிரும் உடம்பும் போல அவன் கொடைப்பண்புடன் பிரிக்க முடியாத தொடர்பைக் கொண்டிருந்தான்.[1]

“அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு

என்போடு இயைந்த தொடர்பு” (திருக் - 73)

### 6.2 மேகத்தைப் போன்ற கைமாறு கருதாத ஈகை

மழை மேகங்கள் எவ்விதப் பலனையும் எதிர்பார்க்காமல் மழையைப் பொழிந்து உலகை வாழ வைக்கின்றன. அதுபோலவே, நல்லியக்கோடனும் வாடி வருந்தி வருபவர்களின் மனதை மகிழ்விக்கத் தன்னிடம் உள்ளவற்றை வழங்கினான்.[1]

“வறியார்க்கொன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்

குறிபெதிர்ப்பை நீரது உடைத்து “ (திருக்குறள்- 221)

மற்றவர்களுக்குப் பயன் கருதிச் செய்வது ஈகை ஆகாது; வறியவர்களுக்குக் கொடுப்பதே உண்மையான ஈகை என்பதை அவன் வாழ்ந்து காட்டினான்.[1]

### 6.3 உபசரிக்கும் முறை

நல்லியக்கோடனைக் காணச் செல்லும் கலைஞர்களை அவன் ஒருபோதும் காத்திருக்க வைப்பதில்லை.[14] அவர்களை உடனே வரவேற்று, சூரியனைப் போன்ற பொற்கிண்ணத்தில் சுவையான உணவை வைத்து, தானே அருகில் இருந்து உண்ணச் செய்து உபசரிப்பான்.[14] போர் வெற்றிகளால் கிடைத்த பொருட்களைத் தனது வீரர்களுக்கும் பாணர்களுக்கும் வறுமை நீங்கும் வண்ணம் வாரி வழங்கினான்.[14]

## 7. தொல்லியல் தரவுகள் மற்றும் வரலாற்றுத் தொன்மை

சங்க காலத் தமிழகத்தின் கொடை மரபையும், நல்லியக்கோடன் போன்ற மன்னர்களின் வரலாற்றையும் வெறும் இலக்கியக் கற்பனையாகக் கருத முடியாது. அண்மைய தொல்லியல் கண்டுபிடிப்புகள் இதற்கு வலுவான ஆதாரங்களை வழங்குகின்றன.[15]

### 7.1 இரும்புக்கால நாகரிகமும் சமூக மாற்றமும்

மயிலாடும்பாறையில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள், தமிழ்நாட்டில் இரும்புக்காலம் கி.மு.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

2172-க்கு முந்தையது என்பதை உறுதிப்படுத்தியுள்ளன.[17] இது வட இந்திய இரும்புக்காலத்தை விடவும் முந்தையது என்பது குறிப்பிடத்தக்கது.[18] இரும்பின் பயன்பாடு அதிகரித்தபோது விவசாயம் மற்றும் போர்த்தொழில் வளர்ச்சியடைந்தது. இதன் விளைவாகவே ஓய்மாநாடு போன்ற சிறிய அரசுகள் வலிமை பெற்று, கலைகளை ஆதரிக்கும் நிலைக்கு உயர்ந்தன.[18]

**7.2 தொல்லியல் அகழாய்வுத் தரவுகள்**

| **அகழாய்வுத் தளம்** | **கண்டறியப்பட்ட பொருட்கள்** | **வரலாற்று முக்கியத்துவம்** |
|---|---|---|
| மயிலாடும்பாறை | இரும்பு வாள்கள், செதுக்கப்பட்ட கற்கருவிகள் | 4200 ஆண்டுகளுக்கு முந்தைய இரும்புக்கால நாகரிகம்.[18] |
| கீழடி | செங்கல் கட்டடங்கள், வடிகால் அமைப்பு, தமிழ்-பிராமி பானை ஓடுகள் | சங்க கால நகர்ப்புற நாகரிகம் மற்றும் எழுத்தறிவு.[20] |
| ஆதிச்சநல்லூர் | இரும்புப் பொருட்கள், முதுமக்கள் தாழிகள் | பண்டைய ஈமச்சடங்கு மற்றும் உலோகத் தொழில்நுட்பம்.[19] |
| கொடுமணல் | நவரத்தினக் கற்கள், நெசவுக் கருவிகள் | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வணிகத் தொடர்புகள்.[15] |

**7.3 ஓவியர் குடியின் கலைத் தொடர்பு**

ஓவியக் கலை சங்க காலத்தில் நன்கு வளர்ந்திருந்தது. ஓவியத்தைக் குறிக்க 'ஓவம்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டது.[22] ஓவியக் கலைஞர்கள் 'ஓவ மாக்கள்' என்றும், காண்பவர் கண்ணைக் கவரும் வகையில் வரைபவர்கள் 'கண்ணுள் வினைஞர்' என்றும் அழைக்கப்பட்டனர்.[22] நல்லியக்கோடனின் ஓவியர் குடி இத்தகைய கலைச் சிறப்பு மிக்க பின்புலத்தைக் கொண்டதாகும். வண்ணங்கள் தீட்டப்படாத கோட்டோவியங்கள் 'புனையா ஓவியம்' என அழைக்கப்பட்டன.[22]

**8. சமூகவியல் பார்வை: கொடையும் பாணர்களும்**

சங்க சமூகத்தில் கொடை என்பது ஒரு பொருளாதாரப் பரிமாற்றமாக மட்டும் இல்லாமல், சமூக அந்தஸ்தைத் தீர்மானிக்கும் காரணியாக இருந்தது.[6]

**8.1 பாணர்களின் வறுமையும் புலம்பெயர்தலும்**

பாணர்கள், கூத்தர்கள், விறலியர் போன்ற கலைஞர்கள் கலையில் சிறந்தவர்களாக இருந்தாலும், நிலையான வருமானமின்றி வறுமையில் வாடினர்.[6] அவர்கள் ஒரு வள்ளலிடம் இருந்து மற்றொரு வள்ளலைத் தேடி நீண்ட பயணங்களை மேற்கொண்டனர்.[6] இவர்களின் கலைத்திறனை மதித்து, அவர்களின் பசியைப் போக்கி, எதிர்கால வாழ்விற்குத் தேவையான செல்வத்தை வழங்குவதே மன்னர்களின் தலையாய கடமையாகக் கருதப்பட்டது.[6]

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

### 8.2 கொடையின் சமூகத் தேவை

பண்டைய காலத்தில் எழுத்தறிவு பரவலாக இல்லாத நிலையில், வாய்மொழிப் பாடல்கள் மூலமே ஒரு மன்னனின் புகழ் பரப்பப்பட்டது.[6] புலவர்களுக்கும் கலைஞர்களுக்கும் மன்னர்கள் செய்த உதவி, உண்மையில் அக்காலக் கலைகளையும் வரலாற்றுத் தரவுகளையும் பாதுகாப்பதற்கான ஒரு சமூக முதலீடாகும்.[6] நல்லியக்கோடன் போன்ற மன்னர்கள் இதனை உணர்ந்து, தன்னிடம் இருந்த செல்வத்தைப் பொதுவுடைமை ஆக்கினர்.[1]

### 9. நல்லியக்கோடனின் ஆளுமைப் பண்புகள் - ஒரு சுருக்கம்

தொல்காப்பியம் ஒரு தலைவனுக்குரிய நான்கு பெருமிதப் பண்புகளைக் குறிப்பிடுகிறது:

"கல்வி,தறுகண்,புகழ்,கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே" (தொல்பொருள் -254)

இந்த நான்கு பண்புகளும் நல்லியக்கோடனிடம் செறிந்து விளங்கின.[1]

1. **கல்வி:** அறிஞர்களை மதிக்கும் பண்பும், நுட்பமான அறிவுத்திறனும் கொண்டவன்.
2. **தறுகண் (வீரம்):** போர்க்களத்தில் அஞ்சாத வலிமையும், பகைவரை வெல்லும் ஆற்றலும் உடையவன்.
3. **புகழ்:** அவனது கொடையினாலும் செங்கோலாட்சியினாலும் உலகமெங்கும் புகழ் பரவியிருந்தது.
4. **கொடை:** கடையேழு வள்ளல்களையும் மிஞ்சும் வண்ணம் வாரி வழங்கும் வள்ளல் தன்மை.

நல்லியக்கோடன் தனது சுற்றத்தாருக்கு நடுவில் அமர்ந்திருக்கும் காட்சியானது, விண்மீன்களுக்கு இடையே மின்னும் வெண்ணிலாவைப் போன்றது எனப் புலவர் புகழ்கிறார்.[1]

### 10. முடிவுரை

சங்க காலத்தில் வாழ்க்கை முறைகள் யாவும் மக்களுக்குப் பயனுள்ள வகையில் அமைந்திருந்தன. மானுடப் பிறப்பானது மற்றவர்களுக்குப் பயனுள்ள வழியில் அமைய வேண்டும் என்பதே சங்க காலத்தின் வாழ்வியல் அறமாகத் திகழ்ந்தது.[1] அக வாழ்க்கையிலும் புற வாழ்க்கையிலும் நிறைவு பெற்ற அக்காலப் பண்பாடு இன்றும் போற்றத்தக்கது.

சிறுபாணாற்றுப்படை காட்டும் நல்லியக்கோடன், வெறும் ஒரு நிலப்பகுதியின் ஆட்சியாளன் மட்டுமல்ல; அவன் ஈகை என்னும் அறத்தின் காவலன். கடையேழு வள்ளல்கள் விட்டுச் சென்ற அந்த அறப்பணியைத் தன் தோள்களில் சுமந்தவன்.[1] இரப்போர்க்கு உண்டியும் உடையும் பொன்னும் மணியும் அளித்துப் போற்றுவது செல்வம் உடையோரின் சிறந்த கடமை என்பதை அவனது வாழ்வு பறைசாற்றுகிறது.[1] இத்தகைய சிறப்புகளைக் கொண்ட நல்லியக்கோடனின் கொடைத்திறன், தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு நீங்காத இடத்தைப் பெற்றுள்ளது. அவனது

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

வரலாறு இன்றைய தலைமுறைக்கு ஈகை, மனித நேயம் மற்றும் நடுநிலைமை ஆகிய விழுமியங்களைக் கற்றுத் தருகிறது.[1]

## 11. துணைநூற்பட்டியல் (References in MLA Style)


[1.]இளம்பூரணார். *தொல்காப்பியம் பொருளதிகாரம்*. சாரதா பதிப்பகம், 2016.

[2.]கதிர்முருகு, உ. ஆ. *பத்துப்பாட்டு மூலமும் உரையும்*. சாரதா பதிப்பகம், 2014.

[3.]நாமக்கல் கவிஞர், உ. ஆ. *திருக்குறள்*. சாரதா பதிப்பகம், 2018.

[4.]நீலகண்டன், கே. டீ. *பத்துப்பாட்டு*. சிவசக்தி நிலையம், 2000.

[5.]புலியூர் கேசிகன், உ. ஆ. *புறநானூறு*. பாரி நிலையம், 2007.

[6.]மாணிக்கம், வ. சுப. *திருக்குறள் தெளிவுரை*. தென்றல் நிலையம், 2023.

[7.]நல்லூர் நத்தத்தனார். "சிறுபாணாற்றுப்படை." *பத்துப்பாட்டு மூலமும் உரையும்*, தொகுப்பு: கதிர்முருகு, சாரதா பதிப்பகம், 2014.

[8.]"ஓவியர் குடி - ஓய்மானாடு." *தமிழ் விக்கிப்பீடியா*, 13 Dec. 2024, ta.wikipedia.org/wiki/ஓவியர்_குடி.

[9.]"கடையேழு வள்ளல்கள்." *தமிழ் இணையக் கல்விக்கழகம்*, www.tamilvu.org/courses/degree/d011/d0113/html/d0113334.htm. Accessed 19 May 2026.

[10.] அகிலா, து. "புறநானூற்று வழியே மன்னனின் கொடைக்கோட்பாடு." *International Research Journal of Tamil*, vol. 4, no. S-13, Nov. 2022, pp. 281-286.

[11.] வனிதா, ச. "சங்க இலக்கியத்தில் புரவலரும் இரவலரும்." *International Research Journal of Tamil*, vol. 4, no. S-10, Aug. 2022, pp. 127-141.

[12.] சுவாமிநாதையர், உ. வே. *பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்*. 1889.

[13.] ராஜன், கே. "மயிலாடும்பாறை அகழாய்வு முடிவுகள்." *தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை அறிக்கை*, 2021.

[14.] Zvelebil, Kamil. *The Smile of Murugan: On Tamil Literature of South India*. BRILL, 1973.

[15.] "கீழடி அகழாய்வு மற்றும் சங்க கால வாழ்வியல்." *The Times of India*, 13 June 2025.


, | Copyright © Author(s)